**தலைப்பு 264 – யாழ்ப்பாண மாவட்டச் செயலகம்/ கச்சேரி தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 264 – யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 21 இல் மாவட்டச் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல்வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 796.90 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 794.05 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மாவட்டச் செயலகத்தின் தேறிய நிதியேற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 2.85 மில்லியன் தொகையாக அல்லது 0.36 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 688.87 | 686.02 | 2.85 | 0.41 |

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதனம் | 108.03 | 108.03 | - | - |
| மொத்தம் | **796.90** | **794.05** | **2.85** | **0.36** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு நடவடிக்கைகளிற்காக 25 அமைச்சுக்கள் மற்றும் 19 திணைக்களங்களால் மாவட்டச் செயலகத்திற்காக ரூபா 6,603.94 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 6,321.62 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 282.32 மில்லியன் தொகையாக அல்லது 4.28 சதவீதமாக இருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்தின் 26401 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக்குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 52.00 | 51.73 | 40.00 | 43.70 | 200.00 | 121.57 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 08 வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 176.18 மில்லியன் ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **வைப்புக் கணக்கு இல.** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா. மில்லியன்** |
| 6000/0000/00/0002/0090/000 | 0.24 |
| 6000/0000/00/0013/0059/000 | 14.44 |
| 6000/0000/00/0014/0006/000 | 23.14 |
| 6000/0000/00/0016/0041/000 | 117.29 |
| 6000/0000/00/0017/0012/000 | 1.49 |
| 6000/0000/00/0018/0053/000 | 5.95 |
| 6000/0000/00/0019/0008/000 | 0.09 |
| 6000/0000/00/0020/0002/000 | 13.54 |
| **மொத்தம்** | **176.18** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களிற்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்டச் செயலகம் பின்வரும் பதிவேடுகளை நாளதுவரையாக பேணியிருக்காதமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 இன் ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | குறைநிரப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 533 |
| (ஈ) | தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1), 846(3) |
| (உ) | அடியிதழ்சேர் புத்தகங்களின் பதிவேடு | கச்சேரிக் கைநூல் 5:10 |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எட்டு மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 55,403,617 ஆரம்ப நிதியேற்பாடு பதின்மூன்று சந்தர்ப்பங்களில் 12 சதவீதம் தொடக்கம் 71 சதவீதத்தால் குறைக்கப்பட்டிருந்த அதேநேரம் ஏனைய நான்கு மீண்டெழும் நிதியேற்பாடுகள் 15 சதவீதம் தொடக்கம் 73 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தன. ஆகையால், முறையான நிதித் திட்டமில்லாமல் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததை இது வெளிப்படுத்தியது.

(ஆ) ஒன்பது மீண்டெழும் செலவின விடயங்களிற்கிடையில் 15 சதவீதம் தொடக்கம் 71 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 2,099,246 கூட்டுத்தொகையான சேமிப்புக்கள் மாற்றப்பட்டமைக்கான திருப்திகரமான காரணங்கள் தரப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள்

### வாழ்வாதார உதவி நிகழ்ச்சித்திட்டம் - தலைப்பு இல. 145

வாழ்வாதார உதவி செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் தெரிவுச் செவ்வையில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) வாழ்வாதார உதவிச் செயற்திட்டம் வெற்றியளிக்காமை**

பின்வரும் பிரதேச செயலகங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதார உதவிக் கொடுப்பனவுகள் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்திருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பிரதேச செயலகத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | வெற்றியளிக்காமைக்கான காரணம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 09 | கால்நடை இறந்தமை |
| வலிகாமம் மேற்கு | 06 | கால்நடை இறந்தமை |
| வலிகாமம் மேற்கு | 04 | பொருத்தமற்ற மாடுகள் வழங்கப்பட்டமை |
| வடமராட்சி கிழக்கு | 06 | கால்நடை இறந்தமை |

**(ஆ) ஒதுக்கப்பட்ட தொகையைவிடக் குறைந்த வாழ்வாதார உதவி வழங்கப்பட்டமை**

2016 பெப்ரவரி 16 ஆம் திகதிய ஜேஎவ்/எம்ஆர்எஸ்/ஆர்ஈஎஸ்/01/ஜிஈஎன்/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் பயனாளி ஒருவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 99,000 இற்குப் பதிலாக பின்வரும் பிரதேச செயலகங்களால் ரூபா 10,000 இற்கும் ரூபா 40,000 இற்கும் இடையில் வாழ்வாதார உதவிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் விளைவாக வாழ்வாதார உதவிக் கொடுப்பனவுகளின் இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பிரதேச செயலகத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | சுற்றறிக்கையை அடிப்படையாகக்கொண்டு ஒதுக்கப்பட்ட தொகை | பயனாளிகளிற்கு வழங்கப்பட்ட தொகை | மீதி |
|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. |
| யாழ்ப்பாணம் | 88 | 8,712,000 | 2,470,619 | 6,238,377 |
| வடமராட்சி தென்மேற்கு | 05 | 495,000 | 334,000 | 161,000 |

**(இ) வாழ்வாதார உதவியை வழங்குவதில் தாமதம்**

பின்வரும் பிரதேச செயலகங்கள் பயனாளிகளிற்கு வாழ்வாதார உதவியை வழங்குவதில் தாமதித்திருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பிரதேச செயலகத்தின் பெயர் | விடயங்களின் எண்ணிக்கை | தொகை | தாமதமான காலப்பகுதி |
|---|---|---|---|
| | | ரூபா. | (மாதங்கள்) |
| யாழ்ப்பாணம் | 46 | 796,050 | 04 |
| வடமராட்சி கிழக்கு | 13 | 1,299,867 | 02 |
| தென்மராட்சி | 02 | 159,445 | 03 தொடக்கம் 06 வரை |

### 3.4 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்றாம் தரப்பினர்களிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,055,964 தொகையான தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட வைப்புக்கள் நடவடிக்கை எடுக்கப்படாமல் 09 மாதங்களிற்கு மேலாக பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) 09 நிறுவகங்களால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,351,713 தொகையான செலவினங்களின் மீளளிப்பு உரிய செலவின விடயக் குறியீடுகளிற்கு எதிரீடு/ தாக்கல் செய்யப்படாமல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு

26401 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 331,925 தொகையான நிலுவை மீதியினை அறவிடுவதற்கோ அல்லது தேவையான சீராக்கங்களை செய்வதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்டச் செயலகச் சொத்துக்களின் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) உடமையாக்கப்பட்டிராத சொத்துக்களின் பாவனை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

காரைநகர் பிரதேச செயலகத்திற்கான அலுவலகக் கட்டிடம் 2013 ஆம் ஆண்டின் போது தனியார் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணியின் உரிமைத்துவம் 2017 செப்தெம்பர் 30 வரையிலும் செயலகத்தால் கையேற்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டிடத்தின் பெறுமதியை தீர்மானிப்பதற்கு தொடர்புடைய கோவை கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

#### (ஆ) பயனற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

நான்கு மோட்டார் வாகனங்கள் 02 தொடக்கம் 06 வரையான ஆண்டுகளிற்கிடையில் பயனற்று அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும், 24 மோட்டார் சைக்கிள்கள் 06 ஆண்டுகளிற்கு மேலாக பயனற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**3.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | |
| | நிதிப்பிரமாணம் 94 | 2,443,148 | பொறுப்புக்களிற்கான சுயாதீன உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | | |
| | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.19 ஆம் பிரிவு | 458,870 | உத்தியோகத்தரின் வேலை மற்றும் நடத்தை திருப்திகரமாகவுள்ளது என்றும் அவர் சேவையில் உறுதிப்படுத்தப்படாமல் விடுவதற்கு காரணமெதுவும் இல்லை என்றும் திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் இரண்டு பிரதேச செயலகங்கள் சேவையில் உறுதிப்படுத்தப்படாத 03 உத்தியோகத்தர்களிற்கு இடர் கடனை செலுத்தியிருந்தன. |
| (இ) | **திறைசேரிச் சுற்றறிக்கைகள்** | | |
| | 2004 பெப்ரவரி 24 இன் 01/2004 ஆம் இலக்கம் | - | மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை சுற்றறிக்கையின் மூலம் வேண்டப்பட்டவாறு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.8 உள்நாட்டு நிதியீட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்**

**செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்**

**யாழ்ப்பாண மாநகர சபை பகுதியில் திண்மக்கழிவை சேகரித்து தரம் பிரிப்பதை முறைமைப்படுத்துதல்**

04 எண்ணிக்கையான கழிவு சேகரிக்கும் கொள்கலன் தொகுதி (900மி.மீX900மி.மீ அளவு), உழவியந்திரத்தில் பூட்டப்பட்ட (Trailer mounted) மொபைல் நடமாடும் கழிவு சேகரிக்கும் பெட்டி மற்றும் கைவண்டிகள் (hand carts) என்பவற்றை தயாரித்து வழங்கும் வேலைகளிற்காக யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரிற்கு ரூபா 12,105,000 தொகை

செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2017 ஒக்தோபர் 15 ஆம் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.9 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த 02 ஆண்டுகளிற்கு மேலாக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கங்களால் நியமிக்கப்பட்ட அங்கீகரிக்கப்படாத நபர்களால் மாவட்ட செயலகம் மற்றும் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம் என்பவற்றிற்கு வருகைதரும் பொதுமக்களிடமிருந்து அலுவலக வளாகத்தில் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் தரிப்பதற்காக முறையே ரூபா 2 மற்றும் ரூபா 10 விலைவீதத்தில் வாகன தரிப்பிட கட்டணங்களை அறவிடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். முறைமையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகளால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.10 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

அனலைதீவு குடியிருப்பு வீதியை புனரமைப்பதற்காக ஒப்பந்ததாரரிற்கு ரூபா 415,900 பெறுமதி சேர் வரி (வற்) செலுத்தப்பட்டிருந்த போதிலும் மேற்படி வற் கொடுப்பனவு ஒப்பந்ததாரரால் இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. பின்னர், குறித்த ஒப்பந்ததாரரின் வற் பதிவு செயற்பாட்டில் இல்லை என இறைவரி திணைக்களம் அறிவித்திருந்தது. எவ்வாறாயினும், ரூபா 194,087 தொகையான மேற்படி வேலையின் நிறுத்திவைத்தல் பணம் வற் கொடுப்பனவின் பகுதியை தீர்ப்பதற்காக வருமானக் கணக்கிற்கு அறவிடப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 31 வரையில் ஒப்பந்ததாரர் அல்லது பொறுப்புவாய்ந்த நபரிடமிருந்து மிகுதியாகவுள்ள ரூபா 221,813 மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.11 நட்டங்களும் சேதங்களும்

15 ஆண்டுகள் தொடக்கம் 29 ஆண்டுகள் வரையான வீச்சிலான காலப்பகுதியிலிருந்து பல்வேறு காரணங்களினால் ரூபா 2,403,388 கூட்டுத்தொகையான நட்டங்கள் கணக்குகளில் திருத்தம் செய்யப்பட்டு தெளிவுபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்படாமல் ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்தன.

### 3.12 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட, பின்தொடர் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டிருக்காத மாவட்டச் செயலகத்துடன் தொடர்புடைய கணக்காய்வுப் பந்திகளிற்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்பின் கீழான விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2013 | 1.14 | தனியார் பயணிகள் கப்பல் சேவைகளின் வேலை தொடர்பான கொடுப்பனவாக முன்னாள் மாவட்டச் செயலாளர் உள்ளடங்கலாக 27 உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப் படியாக 2012 மே 02 இல் ரூபா 3.42 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பயணிகள் கப்பல் சேவைகள் 2009 மார்ச் மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டதுடன் அந்த வேலைகள் தொடர்பான கொடுப்பனவானது சம்பளங்கள் மற்றும் மேலதிகநேரக் கொடுப்பனவு மற்றும் ஏனைய படிகளிற்கு மேலதிகமாக உத்தியோகத்தர்களிற்கு நாளொன்றிற்கு ரூபா 500 விலைவீதத்தில் ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது தனியார் பயணிகள் கப்பல் தொடர்பில் எத்தவொரு உத்தியோகத்தராலும் விசேட வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2017 செப்தெம்பர் 30 வரை அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 3.20 மில்லியன் கூட்டுமொத்தமான தொகைகள் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன. |

## 3.13 மேலதிகக் கொடுப்பனவுகள்

(அ) இலங்கை பெற்றொலியக் கூட்டுத்தாபனத்தின் பிரகாரம், லீற்றரொன்றிற்கான தாரின் (Tar) விலை ரூபா 60 ஆக காணப்பட்ட போதிலும் பிரதேச செயலகங்கள் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பாக லீற்றரொன்றிற்கு ரூபா 70 விலைவீதத்தில் ஒப்பந்ததாரர்களிற்கு கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தன. இதன் விளைவாக 146 சந்தர்ப்பங்களில் ரூபா 2,442,341 தொகை ஒப்பந்ததாரர்களிற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முதலாவது மற்றும் இரண்டாவது தடவை தாரிடலிற்காக நிர்ணயிக்கப்பட்ட நியம விலைவீதம் முறையே ரூபா 54 மற்றும் ரூபா 33 ஆக காணப்பட்ட போதிலும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள் நியம விலைவீதங்களை விஞ்சி வெவ்வேறு விலைவீதங்களை பயன்படுத்தியிருந்தன. ஆகையால் உரிய ஒப்பந்ததாரர்களிற்கு 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,296,636 மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பிரதேச செயலகத்தின் பெயர் | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| | | ரூபா. |
| வடமராட்சி தென்மேற்கு | 25 | 792,244 |
| தென்மராட்சி | 33 | 135,450 |
| வலிகாமம் மேற்கு | 21 | 284,499 |
| நல்லூர் | 21 | 348,439 |

| | | |
|---|---|---|
| தீவகம் தெற்கு | 06 | 56,985 |
| வலிகாமம் தெற்கு | 20 | 97,885 |
| யாழ்ப்பாணம் | 21 | 280,125 |
| வலிகாமம் கிழக்கு | 10 | 135,696 |
| வடமராட்சி வடக்கு | 07 | 165,313 |
| | ------- | ------------- |
| | **164** | **2,296,636** |
| | ==== | ======== |

**3.14 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறுள்ளது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 68 | 49 | 19 |
| (ii) | மூன்றாம் நிலை | 59 | 25 | 34 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,260 | 1,003 | 257 |
| (iv) | ஆரம்ப நிலை | 279 | 188 | 91 |
| | | --------- | --------- | ----- |
| | **மொத்தம்** | **1,666** | **1,265** | **401** |
| | | ===== | ===== | === |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியளவில் 401 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பொருத்தமானவாறு திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது இலங்கை நிர்வாக சேவை (எஸ்எல்ஏஎஸ்) வகுப்பு – 1 இன் உத்தியோகத்தரொருவர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியணியினரை விஞ்சி மாவட்டச் செயலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்தார். இந்த உத்தியோகத்தரிற்கு கடமைகளெதுவும் ஒதுக்கப்படாமல் 2016 ஏப்ரல் 01 தொடக்கம் 2017 யூலை 31 வரையான காலப்பகுதிக்காக ரூபா 1,290,016 தொகை செலுத்தப்பட்டிருந்தது.